செய்தி வெளியீடு எண்.71/2018 நாள் 19.11.2018

## அம்ருத் திட்ட தொழில் நுட்ப சவால் போட்டியில் பங்கேற்ற சென்னை குடிநீர் வாரியத்திற்கு மத்திய அரசின் பரிசு.

-----

பாதாள சாக்கடையில் மனிதர்கள் இறங்காமல் சுத்தம் செய்வதற்கான 'தொழில் நுட்ப சவால் ' என்ற போட்டியினை மத்திய அரசின் வீட்டு வளர்ச்சி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் அம்ருத் திட்டத்தின் கீழ் அறிவித்திருந்தது.

இந்த போட்டியில் சென்னைக் குடிநீர் வாரியம் கழிவுநீர் குழாய்களை பந்து கடத்தும் முறையில் இயந்திரங்களின் மூலமாக சுத்தம் செய்வது குறித்த கருத்துருவுடன் பங்கேற்றது.

சென்னைக் குடிநீர் வாரியம் அளித்த கருத்துருவை ஏற்றுக் கொண்ட மத்திய அரசின் வீட்டு வளர்ச்சி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பின் நடுவர் குழு உறுப்பினர் திரு.சத்தீஷ் குமார் அவர்களை சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தது. பாதாள சாக்கடையில் ஆட்கள் இறங்காமல் பந்து கடத்தும் முறையில் இயந்திரங்கள் மூலம் சுத்தம் செய்வதற்கான செயல் முறை விளக்கத்தினை உறுப்பினர் முன்னிலையில் சென்னைக் குடிநீர் வாரியம் செய்து காட்டியது.

இந்த செயல்முறை விளக்கத்தினை ஆவணப் படமாக தயாரித்து டெல்லிக்கு எடுத்துச் சென்று மற்ற போட்டியாளர்களின் ஆவணங்களுடன் பரிசீலனை செய்து, போட்டியில் பங்கேற்றவர்களில் சென்னைக் குடிநீர் வாரியத்தினை ஆறு வெற்றியாளர்களில் ஒருவராக தேர்வு செய்து அறிவிப்பினை வெளியிட்டது.

உலக கழிப்பறை தினத்தினை முன்னிட்டு இன்று (19.11.2018) டெல்லி விக்யான் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு திரு.ராம்தாஸ் அத்வாலே அவர்கள் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கான பரிசினை வழங்கினார்கள். சென்னைக் குடிநீர் வாரியத்தின் பொறியியல் இயக்குநர் திரு.ஆர்.சிவசண்முகம் அவர்கள் பரிசினை பெற்றுக் கொண்டார்கள்.

இந்த பரிசினைப் பெறுவதற்காக முயற்சிகளை எடுத்துக் கொண்ட பொறியாளர்கள் குழுவினரை சென்னைக் குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு,.அஷோக் டோங்கரே, இ.ஆ.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்